


ஜூபிடரின்
அரசிளங்குமரி
Jupiter Advt

எம். சோமசுந்தரம் அவர்களின் அன்பு நினைவாக....

ஜுபிடர் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்

அளிக்கும்

# அரசிளங்குமரி

நடிகர்கள்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்
எம். என். நம்பியார்
கே. ஏ. தங்கவேலு
எம்.எம்.ஏ. சின்னப்ப தேவர், அசோகன்,
நாகேந்திர ராவ், சேதுபதி, முத்துராமன்,
பசுபதி, சந்திரசேகரன், லூஸ் ஆறுமுகம்
கே. எம். எஸ். மணி, நாகரத்னம்,
வீராச்சாமி, முத்துகிருஷ்ணன்

பத்மினி
ராஜசுலோசனா
என். எஸ். கே. மதுரம்
எம். சரோஜா
குல்சார்பேகம்
பாலா
தாரா
மற்றும் பலர்

கதை வசனம்

கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.,

## அரசிளங்குமரி
### கதைக் குறிப்பு

“வாள், கையிலே தான் இருக்க வேண்டும் — நெஞ்சிலே இருக்கக் கூடாது.” என்ற அறிவுரையின் திரு வடிவம் **வீரநாயகம்**. அந்த மாவீரரைஎதிர்த்துப் போரிட்டு உழவர் குலப் பெருவீரன் **குலசேகரன்**, தன்பரம்பரை வாளையும் சின்னத்தையும் இழந்து மானங்காக்க மரணத்தை முத்தமிடுகிறான்.

போர் நடத்திய இருமறவர்களின் புதிய தலைமுறைதான் **வெற்றிவேலனும் — அறிவழகனும்**. அறிவழகன், தன் தந்தையிழந்த வாளையும், பெருமையையும் மீட்பதற்குத் துடித்துநிற்கிறான். வெற்றிவேலனோ வீர நாயகத்தைப் போன்ற வாள்வீரன். அவனும் வாள் பிடிக்கத்தெரியாத அறிவழகனும் மோதிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அழகே உருவான ஒரு ஆரணங்கு காரணமாகிறாள். அவள் பெயர் **அன்புக்கரசி**. அறிவழகனின் அருமைத் தங்கை. அவளைக் காதலித்து கைவிட்டுப் பேரரசன் புதல்வியாம்அழகுராணியை வட்டமிடுகிறான் வெற்றிவேலன்.



பரம்பரை வாள் பறித்த பகைவனின் மகன், தங்கையின் வாழ்வையும் பறித்தான் எனக்கண்டு வெகுண்டெழுந்த காளை—கொண்ட கொள்கையை நிறை வேற்றக் கொற்றவன் கோட்டைக்குச் செல்கிறான். வாள் வித்தைக்கு ஒரு ஆசிரியர் கிடைக்கிறார். அவர் ராஜகுலத்தினருக்கே வாட்பயிற்சி அளிக்கும் முறையை வகுத்துக் கொண்டவர். அவர்தான் வீரநாயகம். தந்தையிடமே வாள் கற்று, வலிமை பெற்று - தங்கையின் சிரிப்பைச் சிதைத்த கொடியமகனை எதிர்த்து புறப்படுகிறான் அறிவழகன், குகை விட்டெழுந்த புலிபோல.

பகைவெட்டிச் சாய்க்கப் பாய்ந்து வரும் அண்ணனைப் பாசமலர்ப்பாவை அன்புக்கரசி அணையிட்டுத் தடுக்கிறாள் — அந்தத் தடையை அறிவழகன் மதிக்கிறானா?

அவனியையும் அறிவழகனின் நெஞ்சில் குடிபுகுந்த அழகு ராணியையும் அடைவதற்குக்கோட்டை கட்டி அரசரின் சாசனத்தையும் தலைகீழாக மாற்றியமைத்து ஆட்டம் போட்ட வீராதி வீரர்களின்தலைவனும்வெற்றிவேலனின் முடிவு என்ன?

நல்லவர் வாய் வழங்கும் நியாயம் வென்றதா?

வல்லவர் வாள் வழங்கும் தீர்ப்பு வென்றதா?

முத்துத் திரையில்
முழுதும் காண்பீர்!

★★



③

இயற்றியவர்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

பாடியவர்:
லீலா

அத்தானே ஆசை அத்தானே
அன்பே உன்னே நன்னுளிலே கண்டேனே—என்
ஆசை போல கணவனே நான் கொண்டேனே
(அத்தானே)

அரண்மனே உத்தியோகமும்
அறட்டி மிறட்டி சேவகமும்
அபாயம் தந்திடுமெ தப்பாது
(அரண்மனே)

அம்மாடி எந்த நாளும்
அதுக்கும் நமக்கும் ஒவ்வாது
யாருக்குமே அஞ்சும் நிலே கூடாது
(அரண்மனே)

காதல் கதை சொல்வேனே
கவலேயை நான் வெல்வேனே
காலமெல்லாம் உன்னுலின்பம் கொள்வேனே

அத்தானே ஆசை அத்தானே
அன்பே உன்னே நன்னுளிலே கண்டேன்—என்
ஆசை போல கணவனே நான் கொண்டேனே.

1

இயற்றியவர்:
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்:
பி. சுசிலா (கோரஸ்)



தில்லாலங்கடி தில்லாலங்கடி
தெரிஞ்சுக்க வேணும் — புத்தி
தெளிவில்லாத மனிதரெல்லாம்
புரிஞ்சுக்க வேணும்
தில்லாலங்கடி....தில்லாலங்கடி தில்லாலங்கடி

ஆட்டுக்கடா கூட்டங்களே
எங்கே போறீங்க—ஒரு
ஆடு போகும் வழியிலேதான்
நீங்க போவிங்க

நாட்டுக்குள்ளே உங்களைப் போல்
மனுசர் உண்டுங்க
நாடடுக்குள்ளே உங்களைப் போல்
மனுசர் உண்டுங்க — நீங்க
காட்டும் வழியை கச்சிதமா
கடைப்பிடிப்பாங்க.

தில்லாலங்கடி... தில்லாலங்கடி... தில்லாலங்கடி
தெருஞ்சுக்க வேணும்

நல்ல மனுசன் உள்ளம் போல
நெல்லு வெளஞ்சு கெடக்குது
லல்லல்லா லலலலலா லலலா

இயற்றியவர்:

பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்

பாடியவர்:

டி. எம்.
சௌந்தரராஜன்

நந்தவனத்திலோர் ஆண்டி
நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
வந்த இடத்திலோர் மங்கையை வேண்டி

நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
வந்த இடத்திலோர் மங்கையை வேண்டி
வார்த்தையை கொடுத்துப்புட்டாண்டி-இவன்
வம்பாக மாட்டிக்கிட்டுத் தொங்கப் போராண்டி
(நந்தவனத்தில்)

காஷாயம் கட்டிக்கிட்டாண்டி - கொஞ்சம்
காதல் கதையிலும் ஒட்டிக்கிட்டாண்டி
காஷாயம் கட்டிக்கிட்டாண்டி - கொஞ்சம்
காதல் கதையிலும் ஒட்டிக்கிட்டாண்டி
வேஷத்தை மாத்திக்கிட்டாண்டி - இப்போ
வேறொரு ஆளாகி வெளுத்துக் கட்றாண்டி
(நந்தவனத்தில்)





5

இயற்றியவர்:
பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்

பாடியவர்:
சீர்காழி
கோவிந்தராஜன்

தொகையறு

கண்டி கதிர்காமம் எஞ்சுப்பையா கழுகுமலை பழநிமலை
கால்நடையாப் போக வேணும்
எங்கந்தா, எம்முருகா-என்வேலா-எங்குமரா-ஆ-ஆ
சுப்பிரமணியா-ஆறுமுகா-நீ
கண்திறந்து பார்த்திடய்யா

பாட்டு

எட்டுஜாண் குச்சிக்குள்ளே-கந்தையா
எத்தனை நாளிருப்பேன்
எட்டுஜாண் குச்சிக்குள்ளே-கந்தையா
எத்தனை நாளிருப்பேன் - ஒரு
மச்சுவீடுகட்டித் தாருங்காணும் - உச்சி
மலையின் மேலோனே - ஒரு
மச்சுவீடு கட்டித் தாருங்காணும் - உச்சி
மலையின் மேலோனே
சட்டியில் சேர்ந்ததெல்லாம்—
கந்தா உன் சன்னதி சேர்த்திடுவேன்
சட்டியில் சேர்ந்ததெல்லாம்—
கந்தா உன் சன்னதி சேர்த்திடுவேன்
மொட்டை ஆண்டி ஒன்னை முழுசாவே நம்புறேன்
மோட்சம் தந்திடப்பா - அட (மொட்டை)

**தர்கையரு**

தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைப்பார் கோவிந்தம்
மாருத மனசையெல்லாம் மாத்தி வைப்பார் கோவிந்தம்
பட்டை நாமம் கண்டால் பசி தீர்ப்பார் கோவிந்தம் - உன்
கட்டை கடைத்தேறக் கை கொடுப்பார் கோவிந்தம்.

கோவிந்தம் கோவிந்தம்
கொடுத்தா புண்ணியம் கோவிந்தம்

ரகுராமா ரகுராமா
நடுத்தெருவிலே என்னை விடலாமா
அடபாவிகளே பாவிகளே
பார்த்துட்டு சும்மா போறீங்களே
கோவிந்தம் கோவிந்தம்
கோவப்படாதே கோவிந்தம்

**தொகையரு**

மானாகி, மயிலாகி, மானாகி மயிலாகி
நானாகி, நீயாகி வடிவாகி வந்த வடிவே-ஏ-ஏ
பெண்ணாகி, ஆணாகி, பேச்சாகி, மூச்சாகி-அடேயப்பா
பெண்ணாகி, ஆணாகி, பேச்சாகி மூச்சாகி

கண்ணாலே கொல்லும் கண்ணே
கண்ணாலே கொல்லும் கண்ணே-கண்ணே கண்ணே
கண்ணே கண்ணே கண்ணே

**பாட்டு**

உடம்பை நம்பாதே - கண்ணே
உடம்பை நம்பாதே (உடம்பை)
உயிர் பிரிந்த பின்னே - இது
ஒன்றுக்கும் உதவாத மண்ணே
உடம்பை நம்பாதே-கண்ணே உடம்பை நம்பாதே.



**தொகையறா**

தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைப்பார் கோவிந்தம்
மாறாத மனசையெல்லாம் மாத்தி வைப்பார் கோவிந்தம்
பட்டை நாமம் கண்டால் பசி தீர்ப்பார் கோவிந்தம் - உன்
கட்டை கடைத்தேறக் கை கொடுப்பார் கோவிந்தம்.

கோவிந்தம் கோவிந்தம்
கொடுத்தா புண்ணியம் கோவிந்தம்

ரகுராமா ரகுராமா
நடுத்தெருவிலே என்னை விடலாமா
அடபாவிகளே பாவிகளே
பார்த்துட்டு சும்மா போறீங்களே
கோவிந்தம் கோவிந்தம்
கோவப்படாதே கோவிந்தம்

**தொகையறா**

மானாகி, மயிலாகி, மானாகி மயிலாகி
நானாகி, நீயாகி வடிவாகி வந்த வடிவே-ஏ-ஏ
பெண்ணாகி, ஆணாகி, பேச்சாகி, மூச்சாகி-அடேயப்பா
பெண்ணாகி, ஆணாகி, பேச்சாகி மூச்சாகி
கண்ணாலே கொல்லும் கண்ணே
கண்ணாலே கொல்லும் கண்ணே-கண்ணே கண்ணே
கண்ணே கண்ணே கண்ணே

**பாட்டு**

உடம்பை நம்பாதே - கண்ணே
உடம்பை நம்பாதே (உடம்பை)
உயிர் பிரிந்த பின்னே - இது
ஒன்றுக்கும் உதவாத மண்ணே
உடம்பை நம்பாதே-கண்ணே உடம்பை நம்பாதே.

